
Utdanningsdirektoratet

# Eksamen

21.05.2015

## PSP5564 Tamil nivå III
## Elevar og privatistar / Elever og privatister




Nynorsk/Bokmål

## Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timar. |
| **Hjelpemiddel** | Alle hjelpemiddel er tillatne, bortsett frå Internett og andre verktøy som kan brukast til kommunikasjon.<br><br>For framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne. |
| **Bruk av kjelder** | Dersom du bruker kjelder i svaret ditt, skal dei alltid førast opp på ein slik måte at lesaren kan finne fram til dei.<br><br>Du skal føre opp forfattar og fullstendig tittel på både lærebøker og annan litteratur. Dersom du bruker utskrifter eller sitat frå Internett, skal du føre opp nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Informasjon om oppgåva** | Du skal svare på alle dei tre oppgåvene i oppgåvesettet.<br><br>Du får utteljing for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklege område der det er relevant.<br><br>Det er kompetansen du viser i heile oppgåvesettet (samla kompetanse), som skal vurderast. |
| **Kjelder** | http://en.wikipedia.org/wiki/M.I.A._(rapper)<br>http://www.miauk.com |
| **Informasjon om vurderinga** | Sjå eksamensrettleiinga med kjenneteikn på måloppnåing til sentralt gitt skriftleg eksamen. Eksamensrettleiinga finn du på Utdanningsdirektoratets nettsider. |

## Oppgåve 1

Les teksten nedanfor, og svar på spørsmåla under. Svar **på norsk.**

a. Kva for sosiale medium er nemnde i teksten?
b. Kva fordelar og ulemper ved sosiale medium blir tekne opp i teksten?
c. Er du einig i det som står i teksten om ansvar når du bruker sosiale medium? Grunngi svaret.
d. Orda nedanfor finst i teksten. Forklar, **på norsk**, kva dei betyr:

    விழிப்புணர்வு
    குற்றவியல்
    தரவேற்றம்
    துற்பிரயோகம்
    அண்மைக்காலம்

### சமூகவலயத்தளங்களும் சமூகப்பொறுப்புக்களும்

சமூகவலயத்தளங்கள் உலகநாடுகளினுடன் வர்த்தக, பொருளாதார, அரசியல்ரீதியாக உடனுக்குடன் தொடர்பு கொள்வதற்கான சாதனமாக நல்ல நோக்குடன் உருவாக்கப்பட்டன. அத்துடன் மாணவர்களுக்கு அறிவியலூட்டும் சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று இத்தொழில்நுட்பம் ஒரு சிலரால் துற்பிரயோகம் செய்யப்படுகின்றது.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் தனிப்பட்ட தகராறுகள் இடம் பெறுவதற்கும் சமூக வலயத்தளங்கள் சில நேரங்களில் காரணமாக அமைந்து வருகின்றன. அண்மைக்காலங்களில் சமூக இணையத்தளங்களினால் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளமை புள்ளிவிபரங்களில் இருந்து புலனாகின்றன.

சமூக வலயத்தளங்களாக கருதப்படும் முகப்புத்தகம், " யூரியூப் ", "டுவிட்டர்" போன்றவற்றில் தரவேற்றம் செய்யப்படும் விடயங்கள் சமூகத்தின் மத்தியில் நன்மை தருவதோடு குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்து வருகின்றன. முகப்புத்தகத்தினூடாக பாடசாலை மாணவிகள் சிலர் ஏமாற்றப்பட்டு பாலியல் துற்பிரயோகங்கள், கொலைச்சம்பவங்கள், தற்கொலைகள் போன்ற அசம்பாவிதங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

உலகில் சமூகவலயத்தளங்கள் ஊடாக கிடைக்கும் நன்மைகளுக்கு மேலாக துற்பிரயோகத்தால் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களைத் தடுப்பது குறித்து தற்போதைய நிலையில் சகல தரப்பினரும் சிந்திக்க வேண்டியது ஒரு சமூகப் பொறுப்பாகும். உலகில் இச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமையால் அது குறித்து சமூகம் சார்ந்த சிந்தனைகள் மாறியுள்ளன.

தற்போதைய நிலையில் சமூகவலயத்தளங்கள் தொடர்பில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன்; சிறுபராயத்தவர்கள் இத்தகைய சமூகவலயத்தளங்களில் இணைவதை தடுக்க வேண்டியது அந்தக் குடும்பத்தினரின் கடமையாகும். சமூகவலயத்தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த கண்காணிப்புடன் செயற்படுவது இன்றியமையாததாகும். சமூகவலயத்தளங்களைப் பயன்படுத்துபவர்கள் தமக்கு தெரியாதவர்களை நண்பர்களாக இணைத்துக் கொள்வதனாலேயே வீணாண பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டிய நிலைகள் ஏற்படுகின்றன.

**Oppgåvesettet held fram på neste side.**

## Oppgåve 2

Førestill deg at du har vore på ein konsert med M.I.A og er svært fornøgd. Skriv eit kort innlegg til ei ungdomsavis eller ei melding på nettet der du fortel om artisten og konserten. Bruk informasjonen i tekstane under. Skriv **på tamil.**

### மாதங்கி அருள்பிரகாசம்

**எம்.ஐ.ஏ.**
**M.I.A.**



நியூயார்க்கில் டைம் 100 ஒன்றுக்கூடலில் (5 மே 2009) எம்ஐஏ

| பின்னணித் தகவல்கள் | |
|---|---|
| இயற் பெயர் | மாதங்கி அருள்பிரகாசம் |
| பிறப்பு | 17 ஜூலை 1977 (அகவை 37) |
| பிறப்பிடம் | அவுன்சுலோ, இலண்டன், இங்கிலாந்து |
| இசை வகை(கள்) | மின்னணு இசை, வேறு வழி இசை, ராப் இசை, டான்ஸ்ஹால், நடன இசை |
| தொழில்(கள்) | பாடகி, இசையமைப்பாளர், இசை தயாரிப்பாளர், ஓவியர், ஒய்யாரம் வடிவமைப்பாளர் |
| இசைக்கருவிகள் | பாடல், மேளக் கருவி, மின்னணு இசை |
| இசைத்துறையில் | 2000-இன்று |
| வலைத்தளம் | miauk.com |

எம்(**M**) ஐ(**I**) ஏ(**A**) ; (**MIA**) என அழைக்கப்படும் மாதங்கி(மாயா) அருள்பிரகாசம் ஒரு ராப் இசைப்பாடகர். இவரது மேடைப்பெயர் «மியா» என்று இவர் உருவாக்கிய இசைக்குழுவின் பெயரால் அழைக்கப்படுகின்றார். எம்(**M**) ஐ(**I**) ஏ(**A**) ; (**MIA**) என்பது **Missing in action** என்ற ஆங்கில சொற்பதத்திலிருந்து வந்ததாகும். இவர் பாடல், இசை, நடனம், ஓவியம், அழகுக்கலை என்பவற்றில் ஈடுபாடு கொண்டிருப்பது மட்டுமல்லாது துணிவான போராளியுமாவார். இவரது பாடல்கள் விடுதலை மற்றும் சிந்தனைகளை தூண்டுவதாக உள்ளன. இவர் 2008

ஆம் ஆண்டுக்கான ”கிராமி” விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## Oppgåve 3

பின்வருவனவற்றில் **<u>ஒன்றை</u>** தெரிவு செய்து தமிழில் எழுதுக.

1. உலகமயமாக்கலில் இணையதளங்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை கீழ்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு எழுதுக. குறிப்பாக தமிழர்வாழும் பிரதேசங்களில் ஒன்றையோ அல்லது சில நாடுகளையோ மையமாக வைத்து நாம் வாழும் நோர்வேயுடன் தொடர்புபடுத்தி எழுதுக

    - தகவல் பரிமாற்றங்கள்
    - வியாபாரத் தொடர்புகள்
    - கலாச்சாரப் பரிமாற்றங்கள்

2. நீங்கள் தமிழர் வாழும் பிரதேசங்களில் ஒன்றிற்கு சென்றிருந்தாலோ அல்லது செல்லவிருப்பதாக கற்பனை செய்து பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு அந்நாடுபற்றி நோர்வேயுடன் ஒப்பிட்டு எழுதுக.

    - உணவு
    - உடை
    - அரசியல்
    - புவியியல் அமைப்பு

**Oppgåvesettet held fram på neste side.**

3. முற்பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கும்போது உங்கள் மனதில் எவ்வாறான எண்ணங்கள் தோன்றுகின்றன? இனிவரும் காலங்கள் எப்படி அமையும் என்பதை உங்கள் கற்பனையில் எழுதுக.

தொலைபேசி வளர்ச்சியும் – இனிவரும் காலங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களும்

# Bokmål

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timer. |
| **Hjelpemidler** | Alle hjelpemidler er tillatt, bortsett fra Internett og andre verktøy som kan brukes til kommunikasjon.<br><br>For fremmedspråkene er heller ikke oversettelsesprogrammer tillatt. |
| **Bruk av kilder** | Hvis du bruker kilder i besvarelsen din, skal disse alltid oppgis på en slik måte at leseren kan finne fram til dem.<br><br>Du skal oppgi forfatter og fullstendig tittel på både lærebøker og annen litteratur. Hvis du bruker utskrifter eller sitater fra Internett, skal du oppgi nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Informasjon om oppgaven** | Du skal svare på alle de tre oppgavene i oppgavesettet.<br><br>Du får uttelling for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklige områder der det er relevant.<br><br>Det er kompetansen du viser i hele oppgavesettet (samlet kompetanse), som skal vurderes. |
| **Kilder** | http://en.wikipedia.org/wiki/M.I.A._(rapper)<br>http://www.miauk.com |
| **Informasjon om vurderingen** | Se eksamensveiledningen med kjennetegn på måloppnåelse til sentralt gitt skriftlig eksamen. Eksamensveiledningen finner du på Utdanningsdirektoratets nettsider. |

## Oppgave 1

Les teksten nedenfor, og svar på spørsmålene under. Svar **på norsk.**

a. Hvilke sosiale medier er nevnt i teksten?

b. Hvilke fordeler og ulemper ved sosiale medier blir tatt opp i teksten?

c. Er du enig i det som står i teksten om ansvar når du bruker sosiale medier? Begrunn svaret.

d. Ordene nedenfor finnes i teksten. Forklar, **på norsk**, hva de betyr:

விழிப்புணர்வு
குற்றவியல்
தரவேற்றம்
துற்பிரயோகம்
அண்மைக்காலம்

### சமூகவலயத்தளங்களும் சமூகப்பொறுப்புக்களும்

சமூகவலயத்தளங்கள் உலகநாடுகளினுடன் வர்த்தக பொருளாதார அரசியல்ரீதியாக உடனுக்குடன் தொடர்பு கொள்வதற்கான சாதனமாக நல்ல நோக்குடன் உருவாக்கப்பட்டன. அத்துடன் மாணவர்களுக்கு அறிவியலூட்டும் சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று இத்தொழில்நுட்பம் ஒரு சிலரால் துற்பிரயோகம் செய்யப்படுகின்றது.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் தனிப்பட்ட தகராறுகள் இடம் பெறுவதற்கும் சமூக வலயத்தளங்கள் சில நேரங்களில் காரணமாக அமைந்து வருகின்றன. அண்மைக்காலங்களில் சமூக இணையத்தளங்களினால் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளமை புள்ளிவிபரங்களில் இருந்து புலனாகின்றன.

சமூக வலயத்தளங்களாக கருதப்படும் முகப்புத்தகம், ”யூரியூப் ”, ”டுவிட்டர் " போன்றவற்றில் தரவேற்றம் செய்யப்படும் விடயங்கள் சமூகத்தின் மத்தியில் நன்மை தருவதோடு குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்து வருகின்றன. முகப்புத்தகத்தினூடாக பாடசாலை மாணவிகள் சிலர் ஏமாற்றப்பட்டு பாலியல் துற்பிரயோகங்கள், கொலைச்சம்பவங்கள், தற்கொலைகள் போன்ற அசம்பாவிதங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

.

உலகில் சமூகவலயத்தளங்கள் ஊடாக கிடைக்கும் நன்மைகளுக்கு மேலாக துஷ்பிரயோகத்தால் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களைத் தடுப்பது குறித்து தற்போதைய நிலையில் சகல தரப்பினரும் சிந்திக்க வேண்டியது ஒரு சமூகப் பொறுப்பாகும். உலகில் இச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமையால் அது குறித்து சமூகம் சார்ந்த சிந்தனைகள் மாறியுள்ளன.

தற்போதைய நிலையில் சமூகவலயத்தளங்கள் தொடர்பில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன்; சிறுபராயத்தவர்கள் இத்தகைய சமூகவலயத்தளங்களில் இணைவதை தடுக்க வேண்டியது அந்தக் குடும்பத்தினரின் கடமையாகும். சமூகவலயத்தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த கண்காணிப்புடன் செயற்படுவது இன்றியமையாததாகும். சமூகவலயத்தளங்களைப் பயன்படுத்துபவர்கள் தமக்கு தெரியாதவர்களை நண்பர்களாக இணைத்துக் கொள்வதனாலேயே வீணாண பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டிய நிலைகள் ஏற்படுகின்றன.

**Oppgavesettet fortsetter på neste side.**

## Oppgave 2

Forestill deg at du har vært på en konsert med M.I.A og er veldig fornøyd. Skriv et kort innlegg til en ungdomsavis eller en nettanmeldelse der du forteller om artisten og konserten. Bruk informasjonen i tekstene under. Skriv **på tamil.**

### மாதங்கி அருள்பிரகாசம்

**எம்.ஐ.ஏ.**
**M.I.A.**



நியூயார்க்கில் டைம் 100 ஒன்றுக்கூடலில் (5 மே 2009) எம்ஐஏ

| பின்னணித் தகவல்கள் | |
|---|---|
| இயற் பெயர் | மாதங்கி அருள்பிரகாசம் |
| பிறப்பு | 17 ஜூலை 1977 (அகவை 37) |
| பிறப்பிடம் | அவுன்சுலோ, இலண்டன், இங்கிலாந்து |
| இசை வகை(கள்) | மின்னணு இசை, வேறு வழி இசை, ராப் இசை, டான்ஸ்ஹால், நடன இசை |
| தொழில்(கள்) | பாடகி, இசையமைப்பாளர், இசை தயாரிப்பாளர், ஓவியர், ஒய்யாரம் வடிவமைப்பாளர் |
| இசைக்கருவிகள் | பாடல், மேளக் கருவி, மின்னணு இசை |
| இசைத்துறையில் | 2000-இன்று |
| வலைத்தளம் | miauk.com |

எம்(**M**) ஐ(**I**) ஏ(**A**) ; (**MIA**) என அழைக்கப்படும் மாதங்கி(மாயா) அருள்பிரகாசம் ஒரு ராப் இசைப்பாடகர். இவரது மேடைப்பெயர் «மியா» என்று இவர் உருவாக்கிய இசைக்குழுவின் பெயரால் அழைக்கப்படுகின்றார். எம்(**M**) ஐ(**I**) ஏ(**A**) ; (**MIA**) என்பது **Missing in action** என்ற ஆங்கில சொற்பதத்திலிருந்து வந்ததாகும். இவர் பாடல், இசை, நடனம், ஒவியம், அழகுக்கலை என்பவற்றில் ஈடுபாடு கொண்டிருப்பது மட்டுமல்லாது துணிவான போராளியுமாவார். இவரது பாடல்கள் விடுதலை மற்றும் சிந்தனைகளை தூண்டுவதாக உள்ளன. இவர் 2008

ஆம் ஆண்டுக்கான “கிராமி” விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## Oppgave 3

பின்வருவனவற்றில் **<u>ஒன்றை</u>** தெரிவு செய்து தமிழில் எழுதுக.

1. உலகமயமாக்கலில் இணையதளங்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை கீழ்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு எழுதுக. குறிப்பாக தமிழர்வாழும் பிரதேசங்களில் ஒன்றையோ அல்லது சில நாடுகளையோ மையமாக வைத்து நாம் வாழும் நோர்வேயுடன் தொடர்புபடுத்தி தமிழில் எழுதுக

    - தகவல் பரிமாற்றங்கள்
    - வியாபாரத் தொடர்புகள்
    - கலாச்சாரப் பரிமாற்றங்கள்

2. நீங்கள் தமிழர் வாழும் பிரதேசங்களில் ஒன்றிற்கு சென்றிருந்தாலோ அல்லது செல்லவிருப்பதாக கற்பனை செய்து பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு அந்நாடுபற்றி நோர்வேயுடன் ஒப்பிட்டு எழுதுக.

    - உணவு
    - உடை
    - அரசியல்
    - புவியியல் அமைப்பு

**Oppgavesettet fortsetter på neste side.**

3. முற்பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கும்போது உங்கள் மனதில் எவ்வாறான எண்ணங்கள் தோன்றுகின்றன? இனிவரும் காலங்கள் எப்படி அமையும் என்பதை உங்கள் கற்பனையில் எழுதுக.

தொலைபேசி வளர்ச்சியும் – இனிவரும் காலங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களும்

Schweigaards gate 15
Postboks 9359 Grønland
0135 OSLO
Telefon 23 30 12 00
utdanningsdirektoratet.no

Utdanningsdirektoratet